# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2022.03.11 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
# (திருத்தம்)

***(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2:*** *அவ்வாசகமானது (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் 154அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதுடன் அப்பிரிவின் சட்டப்பயன் இச்சட்டக்கோவையின் கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் விதிமுறைப்பட்ட எண்பிப்பிலிருந்து குறித்தசில ஆவணங்களை விலக்களிப்பதற்குமாகும்.*

## குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
## (திருத்தம்)

*ச. வ.- ஓ. 58/ 2021*

### *(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப்பெயர்*

***1.*** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*101 ஆம் அத்தியாயத்துக்கு 154அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

***2.*** பின்வரும் புதிய பிரிவு (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 154 ஆம் பிரிவை உடனடுத்துப்பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டக்கோவையின் 154அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :-

*“குறித்தசில சம்பவங்களில் உறுதியை அல்லது ஆவணத்தை எண்பித்தல் அவசியமற்ற தாகும்*

154அ. (1) (14 ஆம் அத்தியாயமான) சான்று கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டக்கோவையின் கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், (60 ஆம் அத்தியாயமான) விருப்பாவணங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட விருப்பாவணமொன்று தவிர்ந்த, அத்தாட்சிப்படுத்தப்படுவதற்கு சட்டத்தால் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் உறுதி அல்லது ஆவணத்தின் நிறைவேற்றுகை அல்லது மெய்யான தன்மையின் விதிமுறைப்பட்ட எண்பிப்பையளித்தல் அவசியமானதாதலாகாது என்பதுடன்,-

(அ) இச்சட்டக்கோவையின் நியதிகளின்படி கிரமமான நடவடிக்கைமுறையின்கீழ் கோப்பிடப்பட்ட வழக்கொன்றிலான வழக்குரைகளில் அல்லது மேலதிக

வழக்குரைகளில், அத்தகைய உறுதி அல்லது ஆவணத்தின் நிறைவேற்றுகை அல்லது மெய்யானதன்மை கேள்விக் குட்படுத்தப்பட்டு வழக்கெழுவினாவொன் றாக எழுப்பப்பட்டாலொழிய; அல்லது

(ஆ) அத்தகைய எண்பிப்பை நீதிமன்றம் தேவைப்படுத்தினாலொழிய,

அதன் முகப்பளவில் முறையாக நிறைவேற்றப் பட்டுள்ளதாகக் கொள்ளப்படுகின்றது:

ஆயின், இப்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டக் கோவையின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் வழக்கொன்றுக்கான திறத்தவ ரொருவரின் வழக்குரைகளில் உள்ளடக்கப்படாத ஏதேனும் உறுதி அல்லது ஆவணத்தை அத்திறத்தவர் சமர்ப்பிப்பதற்கு நாடுகின்ற சம்பவமொன்றில் ஏற்புடையற்பாலனவாதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டக் கோவையின்கீழ் சுருக்க நடவடிக்கைமுறையின் மீதான வழக்குகளில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.”.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.